# அண்டகோள மெய்ப்பொருள்

ஸேது ஸம்ஸ்தான மஹாவித்வானும்

பாஷா கவிசேகரநும்

அண்ணாமலைச் சருவகலாசாலைத் தமிழாராய்ச்சியாளருமாகிய

**ரா. இராகவையங்கார்**

எழுதியது

சென்னைத் திருவல்லிக்கேணி

ஸ்ரீ வேதவேதாந்தவர்த்தனீ மகாசபையாரால்

வெளியிடப்பெற்றது.

1934.

விலை அணா 4

ஸ்ரீமதே ராமாநுஜாயநம

# முகவுரை

" அண்ட கோளத்தாரணு " என்ற பாசுரம், 'ஆழ்வார் சங்கத்தார்க்கு எழுதிய அகவல்' என்ற தலைக்குறிப்புடன், ஆழ்வார் திருநகரித் தாயவலந்தீர்த்தான் கவிராயரவர்கள் வீட்டிற்கிடைத்த ஒற்றையேட்டில் முதன்முதல் என்னாற் காணப்பட்டது. அதனை மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி 3, பக்கம் 405ல் வெளியிட்டுள்ளேன். அப் பாசுரத்துக்கு அக்காலத்துப் பொருள்காண்டல் அரிதாயிருந்தமையால் ' இதன் பொருள் இப்போது நன்கு விளங்கவில்லை ' என்ற குறிப்பும் ஆங்குத் தரப்பட்டுள்ளது. அப் பாசுரத்தைப்பற்றி நெடுங்காலம் யான் சிந்தித்து வந்ததில், சிலவாண்டுகட்குமுன் அதன் உண்மைப் பொருள் இஃதென்பதை உணரலாயினேன்.

அப் பாசுரத்தின் சொற்றொடர்ப் பொலிவினையும், அதனுளடங்கிய அரிய பெரிய வடமொழிப் பொருளின் மாட்சியையும் நோக்குமிடத்து அஃது ஆழ்வார் அருளிச் செயலாதற்குரிய எல்லாத் தகுதியும் வாய்ந்தது என்று சொல்லத் தடையில்லை. சங்கப்புலவர்கள் தம்மைப் பெரிதும் மதிக்கும்படி ஆழ்வார் செய்வித்த செய்தியைக் குருபரம்பரை நூல்களும், ' அண்டகோளத்தாரென்னு மாரியத் தமிழா லன்று, தண்டமிழ்ச் சங்கம் வென்ற சடகோபர்' (கடவுள் வணக்கம், 13) என இற்றைக்குச் சில நூற்றாண்டுகட்கு முற்பட்டவராகத் தெரியும் கூடற்புராண ஆசிரியரும் கூறுவது, ஆழ்வார் அருளியதே இப்பாசுரம் என்பதை வலியுறுத்தல் காணலாம்.

இவ் வரியபெரிய் பாசுரத்தை யான் பலகாலும் சிந்தித்துக் கண்ட கருத்துக்களை இப்புத்தகத்தில் விளங்க விரித்துள்ளேன். என்னால் விரிய உபந்யஸிக்கப் பெற்ற இப்பாசுரார்த்தத்தைக் கேட்டு மகிழ்ந்த சென்னைத் திருவல்லிக்கேணி ஸ்ரீ வேதவேதாந்த வர்த்தனீ மஹாஸபையார், இதனைப் பலரும் அறிய வெளியிடவிரும்பியவாறு, அச்சபையின் பிரசுரமாக இஃது இப்போது வெளியிடப்பெறுகின்றது. இதனை அச்சிடற்குரிய பொருளை முன்வந்துதவிய, திருவல்லிக்கேணி: ஸ்ரீபார்த்தசாரதி சந்நிதி டிரஸ்டிகளில் ஒருவரான ராவ்பஹதூர் ஸ்ரீமான். வி. ரங்கநாதம் செட்டியார் அவர்கட்கும், அம்மஹாசபையார்க்கும் என் மனமார்ந்த பெருநன்றி உரியதாகும்.

இங்ஙனம்,

**ரா. இராகவையங்கார்.**

ஸ்ரீமதே ராமாநுஜாயநம :

# அண்டகோள மெய்ப்பொருள்

தற்சிறப்புப்பாயிரம்

*சீரண்ட கோளத் திருப்பாட் டுரையிதென*
*யாருந் தெளிய வியம்புகேன்—பாரிற்*
*றெருள்காட்டும் வேதச் செழுந்தமிழ்நா வீறன்*
*அருள்காட்ட மெய்ம்மை யறிந்து.*

---

ஆழ்வார்

## சங்கத்தார்க்கு எழுதிய அகவல்.

---

அண்ட கோளத் தாரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரேழி லொருமை
யீருயிர் மருங்கி னொருயிர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணற் பரப்பில்
வேரும் வித்து மின்றித் தானே
தன்னிலை யறியாத் தோன்மிகு பெருமர
மூவழி முப்பழ முறைமுறை [illegible]ருதலி
னொன்றுண் டோண்சுவை தருவது மற்றது
கல்லி னெழுந்து கடலி னழுந்தி
யறுகாற் குறவ னீரற விளைக்குஞ்

செறிபொழிற் குப்பை தருகட் போன்றுவித்
தறுகோட் டாமா விளக்கு நாட
னவனே தலையிலி யவன்மகண் முலையிலி
தானு மீஞ் ளீனவும் படாஅ
ளேழுவர் மூவர் சிறுவரைப் பயந்தன
ளவளிவ ளுவளென வறிதல்
துவளறு காட்சிப் புலவரது கடனே.

இது 'மயர்வற மதிநலம்' அருளப்பெற்ற நம்மாழ்வார் தங்காலத்துக் கூடலிற் குழாங்கொண்டு தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர்க்கு எழுதியருளிய திருப்பாசுரம் என்பது, கூடலழகர்புராணத்தில் "அண்டகோ ளத்தாரென்னு மாரியத் தமிழா லன்று, தண்டமிழ்ச் சங்கம் வென்ற சடகோபர்" என வருங் கடவுள்வணக்கப்பாடலால் (13) துணியலாகும்.

## இதன் பொருள்.

**1.** அண்டகோளத்து ஆரணு ஆகி என்பது அண்டகோளத்தினுடைய அரிய அணு வளர்ந்து என்றவாறு.

ஆகல்-வளர்தல் : பரிணமித்தல்; வளர்தற்குக் காரணமாகிய ஊழினை "ஆகலூழ்" (திருக்குறள்—372) என்பதனாலறிக. பின்னும் பிரிக்கப்படாத பரமாணு என்பதறிய ஆரணு என்றார். பரமாணு இரண்டு கொண்டது அணு என்பது வடநூற் கொள்கை (பாகவதம்). அண்டகோளத்து ஆரணு—அண்டகோளமாகிய பிரபஞ்சத்தின் இறுதியம்சமாகிய பரமாணு. அஃது ஆகி என்றது அஃது அண்டகோளமாக வளர்ந்து எ-று. ஆலின் வித்து வளர்ந்து என்றால் ஆலின்வித்து ஆலாக வளர்ந்து என்று பொருளாதல் போல இதனையுங் கொள்க. பிரபஞ்சத்தின் இறுதிநிலை

(இதுவே படைப்பிற்கு முன்னிலையுமாகும்) பரமாணுவே என்பதை ஸ்ரீபாகவதம் ௩-ஆம் ஸ்கந்தம் (௧௧-௧) "பிரபஞ்சத்தின் இறுதியமிசம் பரமாணு என்றறியப்படுவது" என விளக்கியவாற்றான் உணர்க. ஷை ௩-ஆம் ஸ்கந்தம் ௧௧-ஆம் அத்தியாய முடிவில், "ஐம்பது யோசனை அகலமுள்ளதும் மேன்மேலும் பதின்மடங்கு அதிகமுள்ள விசேஷண முதலியவற்றால் வெளியிற் சூழ்ந்ததுமாகிய இவ்வண்டகோசமும் இன்னும் மற்றுமுள்ள பல்கோடி யண்டங்களும் எந்த வஸ்துவினிடம் பிரவேசித்துப் பரமாணுவாகக் காணப்படுகின்றனவோ அந்த வஸ்துவைக் காரணங்கட்கெல்லாம் காரணமெனவும், புருஷனும் மஹாத்மாவுமாகிய விஷ்ணுவின் ஸ்வரூபமெனவும், அக்ஷரமாகிய பரப்பிரமம் எனவுங் கூறுகின்றனர்" என வருதலான் இதனுண்மை நன்கறியப்படும். பலகோடி அண்டகோள வரிசைகளும் பரதெய்வத்தினிடம் பரமாணுவாக ஒடுங்கிக்கிடந்து பின் அவன் ஸங்கல்பத்தாற் பரிணமித்து அவ்வண்ட வரிசையாதலையே இங்குக் குறித்தா ரென்பது ஜகத்காரணமாகப் பரப்பிரமத்தைக் கூறுதல்கொண்டு எளிதிலறியப்படும். 'ஆகி' என்று பரிணமித்தல் கூறுதலான் இவ்வாரணு உயிரணு ஆகாமை நன்கறியலாகும். பிரபஞ்சமாகிய பரமாணுவுக்குப் பரிணமம் உள்ளதல்லது, அணுவாகிய ஆத்மாவிற்கு அஃதில்லாமை தெளிக. 'அண்டகோளத்து ஆரணு' என்புழி அத்துச்சாரியை "காமத்துக் காழில்கனி" (திருக்குறள்-1191) என்புழிப்போல அல்வழிச்சாரியையாகக் கொண்டு அண்டகோளமாகிய அரிய அணு எனினும் இழுக்காது. ஆகிப் பூத்த பிரம் என இயையும்.

**2.** பிண்டம் பூத்த பேரொழி லொருமை என்பது சராசரரூபமான பிராணிகள் மலர்தற்குக்காரணமான பெருமையோடு கூடிய நலத்தையும் ஏகத்வத்தையுமுடைய எ-று.

ஆகிப்பூத்த பேரெழில் ஒருமை மரம் என இயைக்க. பூத்தமரம் என்பது பூத்தற்குக்காரணமான மரம் என்றவாறு; "தாழ்ந்த இயல்பின்மை" (திருக்குறள்-903) "நிற்புகழ்ந்த யாக்கை" (பதிற்றுப்பத்து. 44, 8) என்புழிப்போல. பிண்டம்—சராசரப்பிராணிகளின்தொகுதி. இவ்வாழ்வார் பரதெய்வத்தைத் தொன்மிகுபெருமரம் என்று வ்ருக்ஷமாக உருவகப்படுத்துகின்றாராதலின், அதற்கியைய வ்ருக்ஷகாரியத்தாற் பூத்தஎன்று ஏகதேசரூபகமுகத்தாற் பிராணிஸமுதாயத்தை மலர்களாக்கினர். ஸ்ரீ ஸஹஸ்ர நாமத்தில் "புஷ்பஹாஸ:" என்னுந் திருநாமத்திற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதர் "பூவரும்பு மலர்வதுபோலப் பிரபஞ்சரூபமாக மலர்பவன்" என்று பொருள் கூறினர். இதனாற் பூத்தது பிரபஞ்சரூப மென்று துணியலாகும். பெருமை-பரமாணுவை அண்டபிண்ட ரூபமான பிரபஞ்சமாக்கிச் செயற்கரிய செய்யும் ஸங்கல்ப விசிஷ்டனுதற் றன்மை. இதனாற் பரதெய்வத்தின் ஸங்கல்ப விசிஷ்டவேஷமே உலகிற்கு நிமித்தகாரணமாதல் காட்டியவாறும். எழில் - ஞானசக்தியாதி எல்லா நலங்களும்: "எழிலளந்தங் கெண்ணற் கரியானை" (மூன்றாந்திரு: 3) என்று பணிப்பர். ["பூ நலம்" (பரிபாடல்-16) என்புழிப் பரிமேலழகர் பூவினுகிய அழகு எனப் பொருள் கூறலானு முணர்க.] இதனாற் பரதெய்வத்தின் ஞான சக்தியாதி விசிஷ்டவேஷமே உலகிற்கு ஸஹகாரிகாரணமாதல் காட்டியவாறும். ஒருமை-அவ்வண்ட பிண்ட ரூபமான பிரபஞ்சத்தோடு கலந்தொன்றாயுள்ள தன்மை. இதனாற் பரதெய்வத்தின் சிதசித்விசிஷ்டவேஷமே உலகிற்கு உபாதான காரணமாதல் காட்டியவாறும். இங்ஙனம் திரிவித காரணமும் பரதெய்வமேயாகுமென்பது தோன்றப் பேரெழிலொருமை

யால் விசேடித்தார். பூத்த மரம் என்புழிப் பூத்த பெருமையும் எழிலும் ஒருமையும் மரத்தின்கண்ணே நிலைபெறுதலெளிதி னுணரத் தரும். மரத்தின் அவயவமாகிய கொம்பு, இலை, பூ, காய், கனி முதலிய எவையும் மரத்தின்வேறாகாத் தன்மையால் ஒருமை நன்கறியலாகும். இவ்வொருமையினையே கம்பநாடர்

"அம்போ ருகனு ரரனு ரறியார்
எம்போ லியரெண் ணுறினென் பலவாம்
கொம்போ டடைபூக் கனிகா யெனினும்
வம்போ மரமொன் றெனும்வா சகமே."

(இராமா. இரணியன்வதை, 111)

என்பதனால் இனிது விளக்கினார். இவர்க்கு இவ்வாழ்வாருடைய இத்திருப்பாட்டு நோக்கென்பதும் பொருந்தும். "சங்கக் குவடிறக் குத்திய மாறப் பெயர்க்கொலையானை" எனச் சடகோபரந்தாதியில், ஆழ்வார் சங்கம் வென்றருளிய செய்தியை வெளியிடுதலான் இஃது உணரலாம். ஸ்ரீ பாகவதம் "தருவினடியில் நீர்விடுவது அதன் கொம்பு கிளைகட்கு எங்ஙனமாகுமோ, அங்ஙனமே விஷ்ணுவின் ஆராதனம் எல்லாப் பிராணிகட்கும் பயன்படுவது" (அ-ரு-சக) என்று கூறுதலான், மரமும் கிளைகளும்போலப் பரதெய்வமும் பிராணிகளு முண்மை நன்கறிந்துகொள்க. இந்தப் பாகவதத்தாற்கருதிய ஒருமையையே ஆழ்வார் திருவுளம் பற்றினாரென்பது, பூத்த என்னும் வினையாற் பிண்டங்களை மலர்களாக்கியதனானும், அம்மலர்களை யுண்டாக்கிப் பரிபாலிக்குநிலையில் மலரின்வேறாகாத மரமாகப் பரதெய்வத்தை உருவகப்படுத்தியதனானும் இனிது துணியலாம். இவ்வொருமை ரக்ஷ்யரக்ஷகபாவாதி ஸம்பந்தத்தானுளதாவதல்லது ஸ்வரூபஐக்யமாகாமை உய்த்துணர்ந்துகொள்க.

"பாரிடமாவானுந் தான்" (சஉ) என்னும் பெரியதிருவந் தாதித் தொடர்க்குப் பெரியவாச்சான் பிள்ளையாசிரியர் "ரக்ஷ்ய ரக்ஷக பாவாதி ஸம்பந்தத்தால் ஐக்யம்; ஸ்வரூபத: அன்று" என்றுரைத்தவாற்றான் உணர்க. ரக்ஷகத்வத்தை இனிது நிறைவேற்றவே எங்குங்கலந்துறைதலை மேற்கொண்டனன் இறைவன் என்ப.

**3.** ஈருயிர் மருங்கின் ஆருயிர் தொகுத்து என்புழி, ஈருயிர் மருங்கின் என்பது இருவகைப்பட்ட உயிர்களின் பக்கத்தில் எ-று.

மோக்ஷாநந்தத்திற்கு உபகாரமாகிய தெய்வ ஸம்பத்தையுடைய உயிர் என்றும், ஸம்ஸார பந்தத்திற்கு உபகாரமாகிய ஆஸுரஸம்பத்தை யுடைய உயிரென்றும் வகுக்கப்பட்ட இருவகை உயிர்களின் பக்கலில் என்று கொள்க. ஸ்ரீகீதை பதினாறும் அத்யாயத்தில் "இவ்வுலகிற் பிராணிகளின் ஸ்ருஷ்டி, தேவர்களின் ஸ்வபாவ முள்ளதென்றும், அஸுரர்களின் ஸ்வபாவமுள்ளதென்றும் இரு வகைப்படும்" என்று பகவான் அருளிச்செய்ததை ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. இனி ஈருயிரென்றது ஸ்ரீகீதை ஏழாம் அத்யாயத்தில் பகவானைத் தொழாரும் தொழுவாருமாகிய 'துஷ்க்ருதிந: ஸுக்ருதிந:' என்று கூறப்பட்ட இரு வகை உயிர்களை எனினுமாம். தொழாராகிய துஷ்க்ருதிகள் நராதமர், மாயை கவர்ந்த மதியினர், அஸுரஸ்வபாவ முள்ளவர், மூடர் என நால்வகையினர் எனவும், தொழுவாராகிய ஸுக்ருதிகள் ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு, அர்த்தார்த்தி, ஞானி என நால்வகையினர் எனவும், இவருள் ஞானி அத்யர்த்த ப்ரியனை மேன்மையனெனவும், அப் பெருந் தகையோன் கிடைத்தற்கரியோனெனவும், அவனே ஸர்வம்

வாஸுதேவனென்னும் ஞானவான் எனவும் அருளிச் செய்ததால் தொழாரும் தொழுவாருமாகிய இருவகை உயிர்களின் பக்கலில் என்றாலும் பொருந்தும்.

'ஆருயிர் தொகுத்து' என்றது கிடைத்தற்கரிய உயிராகிய தெய்வஸம்பத்து நிறைந்த ஞானிகளாகிய பரமைகாந்திகளைத் தன்னடிநீழலிற் குழாங்கொளச் செய்து என்றவாறும். ஆருயிர்—"ஸமஹாத்மா ஸுதுர்லப:" (ஸ மஹாத்மா ஸுது³ர்லப⁴:) என்றபடி தனக்குங் கிடைக்கரிய மஹாத்மாக்கள். எ—று. வாஸுதேவ தருச்சாயையை விட்டுப் புறம்போகாத பெருந்தகையார் அவரே என்க. மஹாத்மா என்பதே ஆருயிர் எனப்பட்டதெனினும் பொருந்தும். தொகுத்து என்றதனால் கிடைத்தற்கரிய இப் பரமைகாந்திகளைத் தன்னடிநீழலில் திரள்வித்தது பகவத் ப்ரயத்நமென்று காட்டியவாறு. ப்ருஹ்மஸூத்ரபாஷ்ய முடிவில் "அத்யர்த்தப் பிரியம் ஞாநிநம் லப்த்வா" (அத்யர்த²ப்ரியம் ஜ்ஞாநிநம் லப்³த்⁴வா—ஸ்ரீபாஷ்யம்) (இவ்வளவென்று சொல்லற்கரிய ப்ரீதியுடையனாகிய ஞானியைத் தன்பேறாக அடைந்து) என்று ஸ்ரீ பாஷ்யகாரர் உரைத்தருளுதலான் அளவிடப்படாத பிரியனாகிய ஞானியைப் பரதெய்வம் தன் லாபமாக அடைதல் கருத்தல்லது 'ஞானி பரதெய்வத்தை அடைந்து' என்பது ஆழ்வார் கருத்தாகாமை கண்டுகொள்க.

இனி, ஈண்டு மருங்கு என்றது சுற்றம் எனக்கொண்டு, இருவகையுயிராயுள்ள சுற்றத்திற் கிடைத்தற்கரிய தன் ஆத்மஸமாநரான அரியஞானிகளைத் தொகுத்து எனினுமாம். "ஞாநீ த்வாத்மைவ மேமதம்" (ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்—கீதா) (ஞானியோ என்னுயிரே யென்பது என்

கொள்கை) என்னும் ஸ்ரீ கீதையால் ஞானி பகவானுக்கு ஆத்மாவாதல் தெளியலாம். தீயவுயிரையுஞ் சுற்றமென்றது, வெறுக்கின்ற அவர்பாலும் உறைதலானும் அவரையும் சன்ம சன்மாந்தரங் காத்துச் சேறலானும், அவர்க்கும் அருள இருக்குந் தாயும் தந்தையுந் தானுதலானும், அவரையும் மகவென்று கருதித் திருத்தமுயறல் காட்டியவாறு. "தாய் தந்தை எவ்வுயிர்க்குந் தான்" (பெரிய திருவந்தாதி, உ௩) என இவ்வாழ்வாரே அருளிச்செய்தலானிதனுண்மை யுணர்க. "பிதா மாதாச ஸர்வஸ்ய" (ஷி தா ஊ தா வ ஸவ-ஸ்ய) என்பது மஹாபாரதம். சுத்தஸத்வநிஷ்டரான பரமைகாந்திகளைத் தொகுத்து நித்திலத்தன்ன வெண்மணற் பரப்பிற்றொன் மிகு பெருமரம் என இயைக்க. தொகுத்துப் பரப்பில் மிகு மரம் என்க.

4. நித்திலத்தன்ன வெண்மணற் பரப்பில் என்றது முத்துக்களை யொத்த வெண்மையான ஒளியையுடைய பரந்த மணற்பிரதேசத்தில் எ-று.

வெண்மையும், ஒண்மையும், குளிர்த்தியும், உயர்த்தியும், தூய்மையும், அருமையும் முதலிய சிறப்பால் நித்திலத்தன்ன என்றார். வெண்மணற் பரப்பு என்றது ச்வேதத்வீபம் எ-று. இது, திருப்பாற்கடலின் வடகரையிலுள்ள மஹா பரிசுத்தஸ்தலவிசேஷம். திருப்பாற்கடல் கொழித்த நித்திலத்திற்கும் இப்பரப்பில் வெண்மணற்கும் வேற்றுமை காண அரியதாய் ஒரே சுவேதமயமாயுண்மையால் இவ்வாறு கூறப்பட்டது. இதனைப் பாரதம் சாந்திபருவம் (343) 'பாற்கடலின் வடபாகத்திற் பேரொளி நிறைந்த ச்வேதத்வீபம் இருப்பது; அங்குள்ள மக்கள் சந்திரனையொத்த காந்தியினர்; நாராயண பராயணர்; அவ்வன்பர் புருஷோத்தமனை ஏகாந்

பாவனையாலடைந்தவர்; பொறிகளால் வேறொன்றும் நுகராதவரும், உண்ணாதவரும், அசைவற்றவரும், நறுமணங்கமழ்பவரும், ஏகாந்திகளு மாவர்'' என வருவனவற்றா லறிக. இந்த த்வீபத்திற்கு நாரதமஹருஷியானவர் தெய்வகிருபையாற் சென்று ஈங்குள்ள அநிருத்தமூர்த்தியைப் பலபடியாக ஸ்துதித்ததும் பரமைகாந்திகளைத் தரிசித்து ஆச்சரியமடைந்ததும் பிறவும் அப்பருவத்தே கண்டு கொள்க. இதனை வைகுண்டமாகவும் உபசரித்து வழங்குவர். ச்வேத த்வீபம் = வைகுண்டம் என்று ஸ்ரீபாகவதத்தில் ஸ்ரீதர ஸ்வாமிகள் வ்யாக்யானமிட்டார்.

இனி ஸஹஸ்ரநாம த்யானசுலோகத்தில் "க்ஷீரோதந்வத்ப்ரதேசே'' என்பதில் திருப்பாற்கடல் வடகரையில் மணி விளக்கெடுக்கும் மணற்பரப்பில் நித்திலமாலையணிந்த அணையில் இம்மூர்த்தி எழுந்தருளி இருப்பது கூறுதலான், அதற்கியைய நித்திலப் பரப்பில் எனவும் அன்ன வெண்மணற் பரப்பில் எனவும் கூறினு மமையும். அன்ன வெண்மணல்— அத்தகைய வெண்மணல்.

5. வேரும் வித்தும் இன்றி = தான் நிலைபெறுதற்குக் காரணமான மூலமும், தானுண்டாதற்குக் காரணமான பீஜமும் தானேயன்றி வேறில்லாமல் எ-று.

வினைகளையே வேராகவும், அவ்யக்தத்தை வித்தாகவும், பிறவிகளைக் கிளைகளாகவுங் கொண்ட ஸம்ஸார வ்ருக்ஷத்தின் (ஸ்ரீகீதை; விஷ்ணு புராணம் எ-ஆம் அத்யாயம்) இது வேறாய பரப்ருஹ்மவ்ருக்ஷம் என்பது தோன்ற வேரும் வித்தும் இன்றி என்றார். எல்லாப் பொருட்குந் தானே வேரும் வித்துமாகு மென்றவாறு. இத்தன்மையை,

"வேர்முதலாய் வித்தாய்ப் பரந்து தனிநின்ற
கார்முகில் போல்வண்ணன்" (திருவாய்மொழி, 2,8,10)

என்று பணித்தலா னறிக. ஸ்ரீ கீதையிலும் "பீஜம்மாம் ஸர்வ பூதாநாம்" (ஸீஜஂஊஂஸவ-ஸூ-ஞ-தா-நாஂ)(எல்லாப் பிராணிகட்கும் வித்தாகிய என்னை) என்பதனால் எல்லாப் பிராணிகட்குந்தானே வித்தாயிருத்தலைப் பகவான் வெளியிட்டருளினன். 'எல்லாப் பொருள்கட்கும் வித்தாய்' 'தானொருருவே தனிவித்தாய்' (திருவாய்மொழி, 1–5–2,4) என்று பணித்தல் காண்க. ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் ஸம்ஸார வ்ருக்ஷத்திற்கு அவ்யக்தத்தை வித்தென்று கொண்டு, வித்துண்டாதற்கு ஆகாயம் காலம் முதலிய காரணமாதல்போல, அஃதுண்டாதற்கு ஸ்ரீ ஹரிபகவான் காரணன் என்பர் (ஏழாம் அத்யாயம் பார்க்க). இதனால் அவ்யக்தத்தின் பரிணாமத்திற்கு இறைவன் காரணனாதல் அறியலாம்.

**5–6** தானே தன்னிலையறியா–ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனை தானேயும் தன் ஸ்வபாவமகிமை அறியலாகாத எ-று

தன்நிலை – தன் தெய்வநிலை : "தன் செய்வநிலை" என்பது திருவாய்மொழி(3, 10, 6); அஃது அநந்த கல்யாண குணமுடைமை. அஃது அவனால் இவ்வளவென்றறியப்படுமாயின் அநந்தம் என்று முழங்கிய சாஸ்த்ரங்கள் வீணாகுமென்க. ஒருவன் தன்கண் அச்சமும் தன் வலியில் ஐயமும் உள்ள போதன்றே தன்னை அளந்தறியப்புகுவான்? அவ்விரண்டுமில்லாமையால் தன்னிலையை அளந்தறிதலே யில்லாமை அறிக. அசித்தினும், பெத்தர் முக்தர் நித்யர் எனப்பட்ட ஆத்மாக்களினும் வேருய்ப் பிரிப்புண்டு அவற்றிற்கு ஈசனை தானே அறியலாகாத என்றவாறும். அறியா மரம் -என இயையும். "தனக்குந்தன் றன்மை யறிவரியானைத் தடங்

கடற் பள்ளியம்மானை'' எனத் திருவாய்மொழியில் (8,4,6) வருதலான் இதனுண்மை யுணர்க. ஆண்டு, ஈட்டில் நம் பிள்ளையாசிரியர், இத்திருப்பாட்டின் கருத்தொடு பொருந் தவே "ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனன தன்னாலுந் தன்னைப் பரிச் சேதிக்கப்போகாது ச்வேத த்வீபவாசிகள் ஆச்ரயிக்கைக்கு ......திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளினவனை'' என வ்யாக்யானமிட்டது காண்க.

இனி யஜுர்வேத காடகத்தில் 'த்வமேவத்வாம் வேத்த யோஸி ஸோஸி' (த்வமேவ த்வாம் வேத்த யோஸி ஸோஸி) (நீ யாராயுள்ளனை அவனாயுள்ளனை யென்று நின்னை நீயே யறிகிற்பை) எனவும், ஸ்ரீகீதையில் (10–15) "நீ நின்னை ஸ்வயமாகவே நின்னறிவால் அறிகின்றனை'' எனவும், பரி பாடலில் (3) "நின்னைப் புரைநினைப்பி னீயல துணர்தியோ''— நின்னை உயர்வுகூறக் கருதின் அது நீயே யுணரினல்லது பிறரானுணரப்படுதியோ (பரிமேலழகருரை)—எனவும் வரு தலான் ஈண்டுத் தானே தன்னிலையறியா என்பது தன்னியல்பு தானே யறிந்து எனக்கருதினரெனினு மிழுக்காது. இதற்கு அறியா மிகு மரம் என இயைக்க. இவ்வாறு பிறர் அறியா மைக்குக் காரணமிவையென, தொன்மிகுபெருமரம் என்று இப் பரப்ருஹ்ம வ்ருக்ஷத்தை விசேடிக்குமாற்றால் விளக்கு கின்றார்

**6.** தோன்மிகு பெருமரம் என்பது அநாதியே மிகுத்த பெரிய பரப்ருஹ்மமாகிய வ்ருக்ஷம் எ—று

காலத்தாலும் தேசத்தாலும் வஸ்துவாலும் பரிச்சேதிக் கப்படுவதொன்றன்றோ ஒருவர் அறிவிற்கு விஷயமாவது? இஃது அம்மூன்று பரிச்சேதமும் கடந்துள்ளதென்று இவ் விசேடணங்களாற் கொள்ளவைத்தவாறுகும். தொன்மரம் என்றதனுல் காலவளவையைக் கடந்ததென்றும், மிகுமரம்

என்றதனால் தேசவளவையைக் கடந்ததென்றும், பெருமரம் என்றதனால் வஸ்து அளவையைக் கடந்ததென்றும் தெளிவித்தது கண்டுகொள்க. "ப்ருஹத் ரூப:" என்னுந் திருநாமம்பற்றிப் பெருமை வஸ்துபரிச்சேதங் கடந்ததுக்கு ஆயிற்று. "இனைத்தென வெண்வரம்பறியா யாக்கையை" என்பது பரிபாடல். இதற்குப் பரிமேலழகர் "இனைத்தென எண்ணும் எண்ணிற்கு எல்லை யறியப்படாத வடிவினையுடையை" என்றுரைத்தலா னறிக. இக்காலத்ததென்றும், இவ்விடத்ததென்றும், இப்படித்தென்றும் அறியலாகாததென்று குறித்ததெனக்கொள்க.

மரம் என்பது உவமையாற் போந்த பெயர்; தன்னடி நீழலிற் புக்கார் பயன்றுய்த்து வாழுநிற்கும் மரம்போலுதலான் இறைவனை மரமாக்கினர். "அருஞ்சுரத்து மரம்போல அடைந்தார்க்களித்தல் அவற்கியல்பு" என்பர் நச்சினார்க்கினியர் (சீவகசிந்தாமணி,3). "வாஸுதேவதரு" என்ப. வ்ருக்ஷ: என்பது, இறைவன் ஆயிரநாமத்துளொன்றுதல் காண்க. ஸ்ரீ பராசரபட்டர் "உயிர்கட்கு ஜீவனமாகி அவ்வுயிர்கள் தனக்கிழைக்கும் அபராதங்களைப் பொறுத்து நிற்றலான் மரம்" என்று பெயராயிற்றென்றார். மூன்றுலகிற்கும் நிழல்செய்தலான் இறைவன் "பூர்ப்புவஸ்வஸ்தரு:" (ஹூ-ஹ-ஸ்வஸ்லூ) என்று பெயர்சிறப்பன் என்பதும் அவ்வாயிர நாமத்தே கண்டது. ப்ரமாணங்களிற் றலைசிறந்த வேதம் "வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேக:" (வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ - திவி திஷ்டத்யேகஃ - தைத்திரீய உப.) என்றுமுழங்கிற்று. ஒருவன் மரம்போல அசையாது திவ்யலோகத்திலுள்ளானென்பது இதன்பொருள். வால்மீகி பகவானும் தாரை கூற்றால் "நிவாஸ வ்ருக்ஷஸ் ஸாதூநாம்" (நிவாஸவ்ருக்ஷஸ்ஸாதூநாம்) (ஸாதுக்களுக்குப் புகலிடமான மரம்) என்று பெருமாளைக் கூறினன். "ப்ருஹ்மதரு"

என்று ப்ரஹ்லாதாழ்வான்கூற்றில் வைத்துப் பராசர பகவான் வெளியிட்டு அத்தனினின்று முக்தியென்னும் பழம் விழுவதென்னுங் கருத்தால் "முக்தி பல ப்ரபாத:" என விளக்கி யருளியதையும் ஈண்டைக்கு நோக்குக. இவ்வாழ்வார் திருப்பாட்டிற்கு இப்பராசரர் கருத்தே உடன்பாடாகும். இதற்குரிய வடமொழிப்பகுதி வருமாறு:—

> தர்மார்த்தகாமை: கிம் தஸ்ய
> முக்திஸ் தஸ்ய கரே ஸ்திதா॥
> ஸமஸ்தஜகதாம் மூலே
> யஸ்ய பக்தி: ஸ்திரா த்வயி ॥

(ஸ்ரீ விஷ்ணுபுராணம் அம்-1. அத்யா-17. ச்லோ-91.)

இம்முன்னோர் மொழிபொருளைப் போற்றியே இவ்வாழ்வார் "மரம்" என்றாரென்க. "என்னை ஆக்கிக் கொண்டெனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்பதும் மரங்களினுயர்ந்ததாகக் கூறியதாகும்.

அன்றியும் ஈண்டு ச்வேதத்வீபத்து அநிருத்த மூர்த்தியை 'மரம்' என்றது, அம்மூர்த்தி பச்செனத் தழைத்த திருவடிவுடையனாதல்பற்றி யென்று கொள்ளத்தகும். பரிபாடலின்கண் அநிருத்தமூர்த்தியைப் "பைங்கண் மாஅல்" என்றதனையும் அதற்குப் பரிமேலழகர் "பசிய உடம்பினையுடைய அநிருத்தனே"* என உரை கூறியதனையும் நோக்கித் தெளிக. பிற்காலத்தவரும் இக்கருத்தே தழுவி "அத்தியின்

* ஈண்டே "பொன்கட்பச்சை" என்புழிச் "சிவந்த உடம்பினையுடைய காமனே" என வுரைத்துப் "பச்சையென்பது ப்ரத்யும்நனென்னும் வடமொழித் திரிபு" என விளக்கியதனையும் நோக்கிக் கொள்க.

மத்தியிலே.........நித்திரைகொள்ளுந் தமாலத்தருவன்'' (அழகர் கலம்பகக் காப்பு) எனப் பாடியதனையுங் காண்க. மஹாபாரதம் சாந்திபர்வத்தில் நாரதமஹருஷி ச்வேதத்வீபஞ் சென்று இம் மூர்த்தியை ஸ்துதித்த ஸ்தோத்திரத்தில் "வநஸ்பதயே நம: (வனங்கட்குப் பதியாகிய பெருமாத்திற்கு நமஸ்காரம்) என வருதலும் ஈண்டு நினைக்கத்தகும்.

"மனிசரு மற்று முற்றுமாய்'' என்னுந் திருவாய்மொழிப் பாட்டில் 'கடங்கடற் சேர்ந்த பிரானை' என்புழி நம்பிள்ளை ஆசிரியர்-"திருப்பாற் கடலிலே அநிருத்த ரூபியாய்க் கொண்டு கண்வளர்ந்தருளுகிற இடம் அவதார † கந்தமிறே (அவதாரங் கிளைத்தற்குரிய கிழங்கு); வெள்ளத்தரவிற் றுயிலமர்ந்த வித்திறே'' என்று அருளிச்செய்ததனையும் ஈண்டைக் கேற்ப நோக்கிக்கொள்க. ப்ரச்நோபநிஷத்தில் "ஒரு விருக்ஷத்திற் பல பறவைகளுந் தங்கியிருத்தல்போல உலகெல்லாம் பரமாத்மாவினிடத்துத் தங்கியிருப்பன'' என்பதனால் இஃது உவமையாற் போந்த பெயரென்பது அறியப்படும். விஷ்ணுபுராணத்தும், மஹாவிஷ்ணு விருக்ஷம் என்றும், ஸ்ரீதேவி அதன்கட் படர்ந்த கொடி என்றும் பராசரபகவான் அருளிச் செய்தான் (1, 8). மரம் தன் பழத்தைத் தானுண்ணாது தன்னையடைந்த உயிர் உண்ணாநிற்றல்போல இறைவனுண்மை உணர்ந்துகொள்க. 'பெருமரம்' என்புழிப் பெருமை தான் பெரியதாயிருப்பதனாலும், தன்னையடைந்ததைப் பெரிதாக்குதலாலும் உள்ளது என்பர். இதனை விஷ்ணுபுராணத்தில் ப்ருஹ்மசப்தத்திற்கு ஸ்ரீ பராசர பகவான் "பெரிதாதலாலும் பெரிதாக்குதலாலும் ப்ருஹ்மம் என்று அறியப்படுவது'' என்று கூறியதனாலும் உணர

† கந்தம்-கிழங்கு. அவதார கந்தம்-அவதாரமூலம். கந்தம் மூலம் கிழங்கு மூன்று மொருபொருளன.

லாம். வெண்மணற் பரப்பில் வேரும் வித்துமின்றி ஆரணு வாகிப் பிண்டம் பூத்த தன்னிலையறியாத் தொன்மிகு பெரு மரம் என்க.

7. மூவழி முப்பழம் முறைமுறை தருதலின்: மூவழி-ஐச்வர்யகதி, ஆத்மகதி, பரமாத்மகதி என்ற மூன்று நெறியில்: அசித்து சித்து பரதெய்வமெனத் தத்துவம் மூன்றேயுண்மையால் அவற்றை யடையும் நெறிகளும் மூன்றேயாயின. ஐச்வர்யம்-இனிய தேஹவிசேஷமும் அஃது அநுபவித்தற்கினிய தகாக போஷக போக்யங்களும் ஆக அசித்துப் பரிணாமிப் பதேயாகும்: இவை இந்திரச் செல்வம் முதலியன என்க. ஆத்மகதி என்பது கைவல்யமார்க்கம்; கேவலம் ஆத்மாவை அநுபவித்தற்குரிய வழி எ-று. பரமாத்மகதி—நிரதிசயாநந்தமான மோக்ஷ மார்க்கம். இந்நெறிகளிற் செல்லும் அதிகாரியும் மூவகையினர் என்பர். ஆர்த்தனும் அர்த்தார்த்தியும் என இருவகைப்படும் ஐச்வர்யார்த்தியும், கைவல்யார்த்தியும், மோக்ஷார்த்தியுமென மூவகைப்படுதல் ஸ்ரீகீதை ஏழாம் அத்யாயத்திற் கண்டது. இம்மூன்றதிகாரிகட்கும் ஈச்வரனைப் பக்திபூர்வகமாக அடைதல் வேண்டப்பட்டதாகும். எங்ஙனம் ஒரு மரத்திலுண்டாகும் பல்வகைக் கனிகளை அடைய விரும்பின பலரும் அம்மரத்தை ஆச்ரயிப்பது இன்றியமையாததோ, அங்ஙனமே இம்மூன்றதிகாரிகளும் தாம்தாம் அடைய விரும்பிய பலன்களை எய்தற்குப் பலப்ரதாதாவாகிய ஈச்வரனை அடைதல் இன்றியமையாததாகுமென்றுணர்க. அவர் கருதிய பலன்கள் வேறேனும், இம் மூவரும் ஆச்ரயிக்கவேண்டிய இடம் ஒன்றேயாதல் நன்குணிக. இதனலன்றே, ஆளவந்தாரென்னும் பெரியார் "பக்தியோகமே இம்மூன்று பலன்களுக்கும் காரணம்" என்று கீதார்த்தஸங்க்ரஹத்தில் (உஎ) விசதமாக அருளிச்செய்தார். இதனை, "பக்தியோகஸ்ததர்த்தீசேத்" (ஹக்தியொ மவூறயி-க

வெகூ) என்பது முதலாக வருமிடங்களிற் கண்டுகொள்க. ஸ்ரீ கீதாபாஷ்யத்திலும் ஸ்ரீ பாஷ்யகாரர் 'தேஷாம் ஜ்ஞாநீ' என்கின்ற ச்லோக விளக்கத்தில் "ஞானிக்கு என்னொருவனிடத்திற் பக்தி, மற்றை இருவர்க்குமோவெனின் தங்களிஷ்ட பலத்திலும், அவற்றிற்கு ஸாதனமாகையாலே என்னிடத்திலும் பக்தி" என்று பக்தியையே இம்மூன்றற்கும் ஏதுவாக்கி அது வித்யாஸ பலன்றருவது இவ்விதமென்றுங் கூறியருளினர்.

மஹா பாரதத்திலும் "சதுர்விதா மமஜநா பக்தா:" (வ துூவி-யாஉஉஜ நாஸக்தாஃ) என்று, ஸ்ரீகீதையிற் சொல்லியபடியே, ஐச்வர்யார்த்தியை ஆர்த்தன், அர்த்தார்த்தி என இருவகைப்படுத்து மற்றை யிருவரொடுங் கூட்டி, நால்வரும் என் பக்தர்கள் எனக்கூறியுள்ளதும் காண்க. இவற்றுற் கர்மத்தையே முக்யமாகக்கொண்டு அதனடியாகப் பிறந்தஞானந் துணையாக ஐச்வர்யங்களை விரும்பி ஈச்வரனை உபாஸிக்கும் பக்திமார்க்கம் ஐச்வர்ய கதி என்றும், ஞானத்தையே முக்யமாகக் கொண்டு கர்மந்துணையாக ஆத்மாவை அடைய விரும்பி ஈச்வரனை உபாஸிக்கும் பக்திமார்க்கம் கைவல்யகதி என்றும், கர்மஞானங்கள் துணையாக ஈச்வரனையே யடையவிரும்பி அவனையே உபாஸிக்கும் ஏகபக்திமார்க்கம் பரமாத்மகதி அல்லது மோக்ஷகதி என்றும் நன்கு துணிந்துகொள்க. "நோற்ற நோன்பிலேன்" என்னுந் திருவாய்மொழி யீட்டில் நம் பிள்ளை யாசிரியர் "ஞான கர்மங்களிரண்டுங் கூடினாற் பக்தி கூடியல்லது நில்லாது" என்று உரைத்ததனையும் தெளிய நோக்கிக் கொள்க. இதனாலன்றே ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரகத்தில்,

'மற்றுமோர் தெய்வம் வழிபடா வேகாந்தம்
சொற்றவதி காரிகட்குச் சூழ்பொதுவாம்"(மொழிபெயர்ப்பு)
என்று திருவுளம்பற்றினர்.

முப்பழம்—ஐச்வர்ய சுகம், கைவல்ய சுகம், மோக்ஷ சுகம் என்ற மூன்று கனிகளை எ-று. இம்மூவகையை "ப்ருஹ்மணோஹி ப்ரதிஷ்டாஹம்" (ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாஹம்) என்னுங் கீதையின் பாஷ்யத்திற் காண்க.

" இறவாதுவி காரமிலை யாரும்பிர மத்திற்
கெவ்வேதுவின் யான்றங்கிட னவ்வேதுவி னழியா
அறனல்வினை தற்குமொரு முடிபேதுணி புடையா
ரடையின்ப மதற்குந்நிலை யிடனுகுவ லம்மா"

என்பது கீதைப்பாடல். முறைமுறை—அவரவர் அர்த்தித்த கிரமங்களில் எ-று. அதிகாரியும் பலராய் அவர் விருப்பமும் பலவாதலின் முறைமுறை என்று அடுக்கினர்.

"மறைமுறையால் வானாடர் கூடி—முறைமுறையின்
தாதிலகு பூத்தெளித்தா லொவ்வாதே"
(பெரியதிருவந்தாதி-61)

என்பது போலக்கொள்க. முறை என்று நூற்குப் பெயராதலான் முறை முறை என்பது நூன்முறை யென்றால், அவனிட்டவழக்கு சாஸ்த்ரம் என்பதாகாது சாஸ்த்ரமிட்ட வழக்கிலே அவன் தருவதாய் இறைவனுக்குத் தலைமை கூறாது சாஸ்த்ரத்திற்கே அவனினுமிகுத்துத் தலைமை கூறுவதாக முடியும். அன்றியும் சாஸ்த்ரம், பரதெய்வத்திற்கும் அதன் செயற்கும் ஞாபகவேதுவல்லது காரகவேது ஆகாமையு முணர்க*. சாஸ்த்ரத்திற்கும் பரதெய்வம் எட்டா

* 'வாய்மொழியோடை மலர்ந்த தாமரைப்பூ' என வரும் பரிபாடலிற் பரிமேலழகர் "தாமரைப்பூ படைப்பிற்கு முதலாகவந்து மலரும் என்பதற்கு வேதம் ஞாபகவேதுவாதலின்' என வுரைத்தது காண்க.

த்து என்று கூறுதலானும் பரம்பொருளின் தலைமை யுணரப்படும்.

தருதலின் = தருதலான் எ-று. தருதற்கண் எனினும் அமையும். தருதலான் ஒன்றுண்டு ஒண்சுவை தருவது என இயையும். ஈதலின், கொடுத்தலின் என்று உயர்த்தியும் தாழ்ச்சியும் தோன்றக்கூறாது "தருதலின்" என ஒத்தோன் கூற்றாற் கூறியது, இறைவன் தன்னடைந்தார்க்குத் தன்னையே ஒக்க அருள் செய்தல் குறித்ததென்றுணர்க. "வீடும்பெறுத்தித் தன்மூவுலகுக்குந்தரு மொருநாயகமே"† என வரும் ஆழ்வார் திவ்யஸூக்திகளால் இதனுண்மை யுணர்க. ஒருநாயகம் ஈச்வரனுடையதாதல் தெள்ளிது. தன்னொக்க அருளலால் அஃது இவனுக்காயிற்றென்று உணர்க. தன் மூவுலகு என்றதனால் ஐச்வர்யம் ஈச்வரனதாதல் தெளியலாம். ஐச்வர்யம் என்ற சொல்லே இவ்வுண்மையை விளக்கும்.

8. ஒன்றுண்டு ஒண்சுவை தருவது — ஒண்மையொடு கூடிய இனிமையைத் தருவது ஒன்று உள்ளது எ-று.

ஒண்மை - "ஒளிக்கொண்ட சோதியுமாயுடன் கூடுவதென்று கொலோ" என்ற திருவாய்மொழியிற் கூறியருளியபடி, ஜ்யோதிர்மயமான முக்தஸ்வரூபத் தன்மை. ஒண்மை தருவது கூறியதனால் இவ்விருக்ஷம் ஜ்யோதிர்விருக்ஷம் என்பது உய்த்துணரலாகும். சுவை - பரமஸாம்யமான நிரதிசயாநந்த ஸுகம். ஈண்டே தருவதுகூறியதனால் இச்சுவை பரமஸாம்யமாதல் நன்கு துணியப்படும். "தம்மையே யொக்க வருள்செய்வர்" எனவும் "நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபைதி" (...) எனவும் "போகமாத்ர ஸாம்யலிங்காச்ச"

† திருவாய்மொழி ௩ - ௧௦-௧௧.

(ஹோ ஶா த்ருவா ஸூ்ஞ ஜாது-ப்ர.வ-ரு.) எனவும் "பரஞ் ஜ்யோதிருபஸம்பத்ய" (வர ஜ்யோதிருப ஸம்பத்ய) எனவும் வருமிடங்கள் நோக்கிக் கண்டுகொள்க. இதனால் இது மோக்ஷமாகிய பேரின்பமென்று குறித்தார்.

**8.** மற்றது – இதனின் வேறாகியது.

**9-11.** கல்லின் எழுந்து கடலினழுந்திஅறுகாற்குறவன் நீரற விளக்கும் சேறிபோழிற் குப்பை தரு கட்பு—இதன்கண்,. அறுகாற்குறவன் — அறுகாற்கு உறவன் என்றவாறு. அறுகால் - ஆறு வாய்க்கால்: ஆறு வழி எனினுமமையும்.. இவை ஆறிந்திரியங்களென்றவாறு. ஆறிந்திரியங்கள்-மெய் வாய் கண் மூக்குச் செவி மனம் என இவை; "இந்திரியாணி ஷட்" (பொறிகள் ஆறு) என்பது வடநூல்வழக்கு. கீதாசாரியனும் "மநஷ் ஷஷ்டாநீந்த்ரியாணி" (உநஷ்ஷஷ்டா நீந்த்ரியாணி (கரு–எ) என அருளிச்செய்தான். ஆறிந்திரியங்கட்கும் உறவு பூண்டவன் பெத்தாத்மா எனவறிக. இவன் உடம்பைவிட்டுப் புறப்படும்பொழுதும் இவ் வாறிந்திரியங்களையும் விடாது உடன் கொண்டு சேறலான் இவற்றிற்குச் சிறப்பாக உறவுபூண்டவன் என்று பெயர்பெற்றான். இவ்வுண்மையை,

'பொறியைச் சீரணு முயிரெவ் வுடலிற்
புகுவா னெதினின் றுபுறப் படுவான்
எறிகால் தொடுமவ் விடனின் றுமணத்
தினையீர்ப் பதுபோ லிவனீர்த் தெழுமே"(கீதை--கரு--அ)

என வரும் கீதைப்பாடலா லறியலாகும். ஜனன மரணங்களிற் சீவன் இந்திரியங்களுடன் வருவது போவதாயிருக்கு மென்பது ப்ருஹ்மஸூத்ரபாஷ்யத்து, இரண்டாம் அத்யாயம் நான்காம்பாதத்திலும், மூன்றும் அத்யாயம் முதற்பாதத்திலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டது.

இந்திரியங்களை வேதம் "தசமே புருஷேப்ராணா: ஆத்மைகாதச" (உபநிஷத் வாக்கியம்) "சீவனிடத்தில் இந்திரியங்கள் பத்து, மனம் பதினொன்றாகும்" என்றதினால் இந்திரியங்களை ப்ராணபதத்தாற் கூறுதல்நோக்கி அதன் மொழிபெயர்ப்பாகிய "கால்" என்பதனாற் பாடியருளினரெனினும் ஸமஞ்ஜஸமே யாகும். பதினோரிந்திரியங் கூறியிருப்ப ஆறிந்திரியங்கட்கே உறவுள்ளவன் என்றது, கருமேந்திரியமைந்தும் சரீரத்துடன் உண்டாய் அதனோடு இறுதியில் நசித்துவிடுமென்று வ்யாஸ பகவான் ப்ருஹ்மஸூத்ரத்தில் அருளிச்செய்தது பற்றியென்று துணியப்படும். இதனை "ஹஸ்தாதயஸ்து ஸ்திதே தோ நைவம்" (ஹஸ்தாதயஸ்து ஸ்திதே தோ நைவம்–ப்ர. ஸூ. உ, ச, நி) என்பதற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் உரைத்தருளியவாற்றா னுணர்க. இதனால் இவ்வைந்தையுங் கொள்ளாது ஆறிந்திரியங்கட்கே உறவுள்ளவன் என்றார் என்க.

கல்லின் எழுந்து கடலின் அழுந்தி நீரற என்பது, மலையிடை நின்றும், கடலிடை மூழ்கியும் பசையற உணக்குதலான் எ-று.

இவற்றால் இந்திரியங்கட்கு உறவு பூண்ட பெத்தாத்மா ஐச்வர்யகாமனாய் அதைஅடைதற்கு உபாயமாகத் தீர்த்தம் படிந்தும், மலையிடைத் தனிநின்றும், நெருப்பிடை நின்று பசையறவுணக்கியும் தவஞ்செய்தல் முதலிய கர்மங்களைக் குறித்தாராவர். இதனை

"பொருப்பிடையே நின்றும் புனற்குளித்து மைந்து
நெருப்பிடையே நிற்கவுநீர் வேண்டா"

(மூன்றாந்திருவந்தாதி-எசு)

என வரும் பாசுரங்கொண்டுணர்க. எழுதல் - இராது நிற்றலாதலானும், கல் - பொருப்பாதலானும் "பொருப்

பிடையே நின்றும்'' என்பதனையே 'கல்லின் எழுந்து' என்ப தனைக் கூறினர். "கல்லுங் கனைகடலும் வைகுந்த வானாடும்'' (பெரிய திருவந்தாதி,68)என்புழிக் கல் என்பது பொருப்பா தல் காண்க. 'வடபெருங்கல்' எனப் புறப்பாட்டினும் இமய மலையைக் கூறுதல்காணலாம். புனற்குளித்து மென்பதனையே "கடலினமுழ்ந்தி'' என்று கூறிக்காட்டினர். தீர்த்தங்களிற் றலை சிறந்ததாகலின் கடலைக்கூறினர். "நீண்டதோள் மால்கிடந்த நீள்கடனீ ராடுவான், பூண்டநா ளெல்லாம் புகும்'' (மூன்றாந் திரு.69)என்றபாசுரத்தால் இதன்உயர்த்திநன்குணரலாகும். அழுந்தல்-மூழ்குதல். நீரற என்பது பசையற உணக்குதலா தலான் நெருப்பிடைநிற்றல் கூறினர். பரமைகாந்திகள் வேண் டாவென்று தள்ளியவற்றை இப்பெத்தாத்மா ஐச்வர்யகா மனுய்ச் செய்தொழுகுமாறு கூறப்பட்டது. 'நீரற' என்பது பசையறவுணக்குதலைக் குறிப்பதாதல் "முழூஉவள்ளூர முணக்குமள்ள'' (புறம்.219) என்று கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தானை நல்லிசைப் புலவர்பாடியதனுன் நன்கறிய லாகும். ஐச்வர்யகாமன் பல்வகைக் கர்மங்களையே தலையாகக் கொண்டு காயம்வாட்டுதலை

"படிமன்னு பல்கலன் பற்றோடறுத் தைம்புலன் வென்று
செடிமன்னு காயஞ்செற்றார்களு மாங்கவனை யில்லார்
குடிமன்னு மின்சுவர்க்க மெய்தியு மீள்வர்கள்''

எனவருந் திருவாய்மொழியா னுணர்க. (4, 1, 9)

விளக்கும் செறிபொழிற்குப்பை கருகட்பு-(அறகாற்கு உழவன்) இவ்வாறு எழுந்து அழுந்தி நீர் அறுதலான் அவற் றின் பயனை விளக்கின்ற செறிந்த கற்பகச்சோலை உதிர்த்த குப்பைகள் தரும் வஞ்சம் எ-று. பொழில் என்றது, கற்பக முதலிய ஐந்தருக்களுள்ள சோலையாதலான். இதனைக் கற் பகச்சோலை என்பது தலைமையான வண்மைபற்றி. ஈண்டுக் கூறிய இந்திரச் செல்வம்,

"இன்றளிர்க் கற்பக நறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை" என்பதும், அதுவும் அவ்வைந்தருச்சோலை யுதிர்த்ததென்பதும், நல்லறிவாளர் கண்டுகைவிட்ட மயல் (துரால்) என்பதும் தோன்றச் செறிபொழிற் குப்பை என்றார். "குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை" என்பது இவர் திருவாக்கு. இது, நல்கிய இறைவனை ஆங்கு மறப்பித்தலானும் புண்ணிய கர்மம் நசித்து மண்ணிடைத் தோன்றியவிடத்தும் அச் செல்வத்திற்கே வாசனையால் முயலச்செய்தலானும் "குப்பை தரு கட்பு" என்றார். கட்பு-களவு, வஞ்சம் எ-று. "செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமுஞ் சிறிது பேணார்" என்ப. (பாரதம்)

"வியன்மூவுலகு பெறினும்போய்த் தானேதானே யானாலும்" (திருவாய்மொழி. 8-10-2) என்று ஐச்வர்ய கைவல்யங்களைக் கூறியவிடத்து ஐச்வர்யார்த்தி மூவுலகும் அருமையிற் பெறுதல் கூறியதேனும் ஈண்டுத் தலைமைபற்றி இந்திரச் செல்வமே கருதினரெனக்கொள்க.

இனி, இதற்கே வேறோருரை கூறுதும். அறுகாற்கு உறவன் என்புழி அறுமீனைக் கால்வடிவாகவுள்ள உரோகிணிக்கு உறவுபூண்ட சந்த்ரன் எ-று. உரோகிணி ஆறுய்ச் சகடம் எனப்பெறுதலும் சந்த்ரனுக்கு அதிகப்பிரியையாதலும் நூல்களிற் காணலாகும். இஃது அறுமீன் எனவும் பெயர் பெறுமென்பது "அறுமீனினைவனள்" என வரும் அகநானூற்றின் குறிப்பில் "அறுமீன் - உரோகிணி" எனக் கூறியதனைறிக. கால்-உருளை. "சகடக்கால்" (நாலடி) எனவும் "கால்பார்கோத்து ஞாலத்தியங்கும்" (புறம். 135) எனவும் வருவன காண்க. வ்ருஷப வீடு சந்த்ரனுக்கு உச்சஸ்தானமாதலின் ஆண்டுள்ள உரோகிணியின்பால் அவன் மிகவும் உறவுள்ளவனயினன் என்பர். ரோஹிணீசன் ரோஹிணீ நாயகன் என்பன சந்திரன் பெயர்களாகும்.

இவன் நீரறனென்றது, இவன் உடலமிழ்தத்தைத் தேவர் பருகலான் இவன் அமிழ்தம் அற என்றவாறும். இவ்விதம் சந்த்ரன் அமிர்தமயமாய்க் குளிர்ந்த ஜலபரமாணுக்களாலே சுக்ல பக்ஷத்தில் தேவர்களையும் கிருஷ்ண பக்ஷத்தில் பிதுர்க்களையும் திருப்தி செய்கின்றான் என்று புராணரத்னம் கூறுதலை நோக்குக (விஷ்ணுபுராணம் 2-12). இத் தேவர்வளர்ச்சிக்கு ஒருவன் உடல் தேயவேண்டுவதென்று குறித்தவாறும்.

இனிக் கல்லினெழுந்து கடலின் அழுந்தி என்பதனைக் கடலினழுந்திக் கல்லினெழுந்து என மாறிக் கூட்டுக. சிந்தாமணிப் பதிகத்திற் "குணமாலையை வைதுமாறி" என்பதனை 'மாறி வைது' என மாறிக் கூட்டியதுபோல ஈண்டுங் கொள்ளற்பாலது ; இவ்வளர்ச்சியும் நிலைபேறுடையதில்லையென்று இதிகாசங்காட்டியது இஃதென்க. இவ்விந்திரச் செல்வம் துர்வாஸ முனிவர் சாபத்தாற் கடலினழுந்தி மந்தரமென்னுங் கல்லானெழுந்து சந்த்ரன் நீரற விளக்கும் செறிபொழிற்குப்பை என்றவாறும். சந்த்ரன் விளக்கும் பொழில் என்க. சந்த்ரன் தன் அமிழ்தம் அரு நிற்கவும், விளக்கின்ற கற்பகச்சோலை எ - று. ஓஷதீசன் சந்த்ரனாதலான் அவன்விளக்கும் பொழில் என்றார். இச் செல்வம் சந்த்ரன் விளைப்பதென்றாலும் இழுக்காது; என்னையெனிற் கூறுவேம். வீடு புகுதற்குரியது அர்ச்சிராதிகதியென்றும் சுவர்க்கம் புகுதற்குரியது தூமாதிகதி என்றும் வேதம் கூறும். இவ்விருகதிகளுள் ஐச்வர்யார்த்திகள் புகும் தூமாதிகதி, முதலிற் சந்த்ரனிடம் புக்கு அப்பாற் சுவர்க்கம் போகும் முறைமைத் தாதலின் "சாந்த்ரமஸம்" என்று வழங்கப்படும். இச்செல்வம் திங்களாகிய உண்டியால் அமைவதனாலும் இதனுண்மை யுணர்க. பரிபாடலில், "நிறைமதி யுண்டி யமரர்க்கு" எனவும், "அமரருண்டி மதி"

எனவும், "மதியுண் அரமகள்" எனவும் வருவனவற்றால் தேவர்க்குத் திங்களுணவாதல் காணலாம். இச் செல்வம் குப்பையாதலும் கட்பு ஆதலும் இவ்வுரைக்கும் ஒக்கும்.

**11–12.** ஒன்று வித்து அறு கோட்டு—பிறிதொன்று வித்து அற்ற குற்றமுடைத்தென்றவாறு.

இது கைவல்யார்த்தியின் பலனுதல் காட்டுவாராய் வித்தற்ற தோஷமுடைத்தென்று கூறினர். கோள்—குற்றம். தாளையுடையது தாட்டு என வருவதுபோல இதனையுங் கொள்க. வித்து என்பது பெரிய மரத்தையுந் தன்னுட் சூக்குமமாய் அமர்த்திக்கொண்டு, வாய்த்தவிடத்து அம் மரமாய்ப் பரிணமிப்பதற்குக் காரணமாய தொன்று. இதனை "நீல நிறத்து நெடுந்தகை வந்தோர், ஆலமர் வித்தி னருங் குறளானன்" எனக் கம்பநாடர் கூறுதலானறியலாம். ஈண்டுத் தன்னிலையறியாத் தொன்மிகுபெருமரம் இக்கனியி னுள்ளே சூக்குமமாகவும் இல்லாமையால், எப்பொருட்கும் வித்தாய தனிமுதல் இல்லாமல், கேவலந் தன்னைத்தானே அனுபவிப்பதாகலின், தெய்வமில்லாமையைக் குற்றமாகக் கொண்டு கூறினர். "தானேருருவே தனிவித்தாய்" (1, 5, 4) என்னுந் திருவாய்மொழியிலே இறைவனே வித்தாகக் கூறப் படுதல் காணலாம்.

> "பிறப்பிறப்பு மூப்புப் பிணிதுறந்து பின்னும்
> இறக்கவு மின்புடைத்தா மேலும்—மறப்பெல்லாம்
> ஏதமே யென்றல்லா லெண்ணுவனே மண்ணளந்தான்
> பாதமே யேத்தாப் பகல்" (பெரிதிருவந். 80)

என்பதனாற் கைவல்ய சுகத்தின் சிறப்பெல்லாம் விசதமாக எடுத்தோதி, அதன்கட் பரதெய்வத்தை யேத்தாத மறப்பே பூர்ணமென்றும் அஃது ஏதமே என்றும் தேற்றமாக உரைத்தருளியதுகொண்டு இங்கும் குற்றமுடைத்

தென்று தெளிவித்தார். ஏதம், குற்றம், கோள் என்பன ஒரு பொருளன. ஏதம்-துன்பம் எனினுமமையும்.

"நிற்கின்ற தெல்லா நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாங் கடை" (இரண்டாந்திரு. 54)

ஆதலான், இவர்க்குக் கைவல்யசுகம் கடையாயிற்று. இந்திரச் செல்வம் பெற்றவன் தன் புண்ணியம் நசித்துப் பின் மண்ணிற் பிறத்தலான் ஒருகால் தெய்வத்தை நினைந்து வீடெய்த அவகாசமுண்டு. இக்கைவல்யசுகத்திற் பட்டானுக்கு மீண்டும் பிறத்தலின்மையால், தெய்வ நினைப்பிற்கே அவகாசமில்லையென்று கொண்டு கடையாக்கினர். "அமரர் கழல்தொழுது நாளும் இடைநின்ற வின்பத்த ராவர்" (இரண்டாந் திருவந்தாதி, ௧௧) என்பதனால் தேவர்க்குக் கடவுள் கழறொழுதலுண்மையும் அவர் இடைநின்ற இன்பத்தராதலும் உணர்ந்துகொள்க. இதற்கு வேறுகூறலு முண்டு.

இனிக் கைவல்யத்தைத் தோடற்ற நெல்லிற்கு (௧. ௨௨) விஷ்ணுபுராணத்தில் உவமித்தலான், அதனையே ஈண்டுத் தழீஇயினரெனக் கொண்டு "வித்தறு தோட்டு" எனப்பாடம் ஓதி, ஒன்று அறுதோட்டு வித்து என்றலும் நன்கு பொருந்தும். "நாற்கூற்றே மருந்து" (திருக்குறள். ௯௫0) என்புழிப்போலத் தோட்டது என்பது தோட்டு என விகாரமாயிற்றெனினும் இழுக்காது.

**12.** ஆமா விளக்கும் நாடன் என்பது, இங்ஙனம் ஆமாறு நாடு விளப்பவன் எ-று. ஆம் ஆறு என்பது ஆமா என வந்தது செய்யுள் விகாரம். "தேறுமா செய்யா அசுரர்களை" (பெரிய திருவந்தாதி, ௩௩) என இவ்வாழ்வாரே வழங்குதல் கண்டு கொள்க; "ஆமாறொன்றறியேன்" (திருவாய் 4,9,2) என்பது இவர் வழக்கேயாம். இங்ஙனம் ஆகும் ப்ரகாரத்திலே (ஆம் ஆற்றிலே) விளக்கும் நாடன் என்க.

ஜகத் ஸ்ருஷ்டி செய்பவன் எ-று. விளக்கும் நாடன் என்பதனை நாடுவிளைப்பவன் என்றுகொள்க; 'செய்த வேள்வியர்' (திருவாய் 5,7,5) என்பதனை வேள்வி செய்தவர் என்று கொள்வதுபோல. இவ்வழக்கு வடநூலிலே மிகவும் பயில்வதொன்று; பெருந்தமிழ்நூல்களினும் ஆங்காங்குக் காணலாம்.

நாடு விளைப்பவன் — உலகு படைப்பவனாகிய பிரமன். நாடு உலகிற்காதல் "நாட்டைப் படையென் றயன்முதலாத் தந்த" என்னும் நாச்சியார் திருமொழியால் (14, 9) அறிந்துகொள்க. இறைவன் ஆணையாற் பிரமன் நாடு விளைப்பது இம்மூன்று பெரும்பலன்களுள் ஒன்றேனும், உயிர்கட்கு ஆமாறன்றி வேறில்லை யென்பது கருத்தாகும். ஸ்ரீமத் பாகவதத்தில் (11—3—7) "ஆதிமூர்த்தி ஜீவனுக்கு உயர்ந்த ஸித்தி உண்டாம்பொருட்டுப் பூதங்களாற் பிராணிகளைப் படைத்தான்" என வருதலானும் உணர்க.

" உய்யவுலகு படைத்து " எனப் பெரியாழ்வார் திருமொழியினும் (1, 6, 1)

"படைத்திட்ட திவ்வைய முய்ய முனநாள்
பணிந்தேத்த வல்லார் துயராயவெல்லாந்
துடைத்திட் டவரைத் தனக்காக்கவென்னத் தெளியா"

எனப் பெரியதிருமொழியினும் (10, 6, 7) வருதல் கொண்டு இவ்வுண்மை அறிக. உயிர்கட்கு அநுகூலிக்கவே உலகு விளைப்பதல்லது ப்ரதிகூலிக்கவில்லையென்பது கருத்து. இங்ஙனம் மாக்கதிக்கணுமாறு நாடு விளைப்பவனாகவும் "என்னொருவர் தீக்கதிக்கட் செல்லுந்திறன்" எனப் பெரியோரிரங்குதலான் இஃதெளிதிலறியலாம். தீக்கதி புகுவது உயிர்கள் தம் தீயவினையால் என்றறிக.

"நாவாயி லுண்டே நமோநார ணாவென்று
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கட் செல்லும் வகையுண்டே யென்னொருவர்
தீக்கதிக்கட் செல்லுந் திறன்" (முதற்றிருவந்தாதி, 95)

என்னும் பாசுர நோக்கிக்கொள்க. வாய் படைக்கப்பட்டுள்ளது; அதன்கண்ணே நாப் படைக்கப்பட்டுள்ளது; நாரணா என்றுரைக்கும் உரை நித்யமாகவுள்ளது. இந்நாவையும் இத்திவ்ய நாமாவையுஞ் சேர்த்தால் "மாக்கதிக்கட் செல்லவகையுண்டே" என்றோதியவாறும். ஈச்வரன் உடம்பைப் படைப்பது பந்தம் ஒழிதற்கேயன்றி வேறொன்றற்கில்லை யென்பது.

"ஆப்பங்கொழியவும் பல்லுயிர்க்கும்—ஆக்கை
கொடுத்தளித்த கோனே குணப்பரனே யுன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்"
(நான்முகன் திருவந்தாதி, 93)

என்பதனாலறியலாம். இத்துணையுங் கூறியவாற்றால் படைப்பவன் உலகு விளைப்பது, உயிர்கள், முற்கூறிய மூன்று கதிகளிலும் ஆமாறல்லது நரகிற்போமாறில்லையென்று துணிந்துகொள்க.

**13.** அவனே தலையிலி என்பது உலகு விளைப்பவனாகிய அப்பெரியோனே தன் தலையிழந்தவனாயினான் எ-று.

நாடன் என்பதன்பின் அவனேயென அடுத்து வேண்டாத சுட்டுச்சொல் வந்தது, முன்னே எல்லாருடைய தலைகளையும் தன் தலைகளையும் படைக்கும் அவனே பின்னே தலையில்லையாயினான் என்று குறிக்கொள்ளுதற்கென அறியலாம். சிந்தாமணிப் பதிகத்தில் (4) "தேவிபோகி...சுடுகாடவள் சேர்ந்தவாறும்" என்புழி "தேவியவள்" என வந்தது, முன்னே இன்னமிழ்தாயினவள் பின்னே இங்ஙனஞ் சுடுகாடுபுக்காள் என உணர்த்தற்கு என்பதுபோல இதனையுங்கொள்க.

பிரமன் பலதலை படைத்துக்கொண்ட செய்தி மத்ஸ்ய புராணம் ௩-ஆம் அத்யாயத்திற் (30-41) கண்டது. ஆண்டு இவன் தன்னுடம்பிற் றோன்றிய ஸரஸ்வதியைக் கண்டு காமித்தான் என்றும், இவனைக்கண்டு ஒவ்வோர் திசையினும் அவள் ஒதுங்கினள் என்றும், ஒதுங்கியதிசையெல்லாம் இருந்தபடியே தலையைப் படைத்துக்கொண்டு நோக்கினனென்றும், அதுகண்டு ஸ்ரஸ்வதி வானம் புகலாயினள் என்றும், அவள் வான்புகுதலைக் காண உச்சியில் ஐந்தாந்தலை படைத்து நோக்கினன் என்றும், இவ்வாறு ஐந்தலையன் ஆயினனென்றும், ஐந்தாந்தலையைச் சடைகளான் மறைத்திருந்தா னென்றும் கூறுதல் காணலாம். இவன் ஐந்தலை வரலாறு இப்புராணங் கூறுதல் கொண்டு, இவன் முதற்கண்ணே நான்கு மில்லனுயிருந்தானென்று உய்த்துணரலாகும்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும்' (குறள், 1101) ஐம்பொறியுமுள்ள உத்தம அவயவம் இல்லான் என்றது, இவன் காமபோகந்துய்த்தற்கேற்ற உறுப்பே இல்லையாயினன் என்பது கருதிற்று."ஐம்புலனு மொண்டொடிகண்ணேயுள"என்பது திருக்குறள் (ஷை). பின் பிரமசிரசு கிள்ளப்பட்டுச் சிவபிரான் கைய்து ஆயிற்று எனப் பின்னூலினுங் கேட்கப்படுதலான், தலையிலி என்றார். "கபாலநன் மோக்கத்துக் கண்டு கொண்மின்" (திருவாய்மொழி. 4—10—4)என்புழி, நம்பிள்ளையாசிரியர் "ஒருவன் தலைகேட்டு நின்றான்" என்று உரைத்ததனாலும் "தலையிலி"யாதலுணர்க; "வாணன் கையிழந்து நின்றான்" என்பதுபோல இதனையும் கொள்க.

இவனைப் பரமேஷ்டி, சுவயம்பூ என்பதுபற்றித் தன்னிற் றலைமை வேறில்லானென்று பொருள் கொள்ளலாமேனும், பின் முலையிலி என்று உறுப்புப்பற்றி வந்ததுதனே டொருபடித்தாய் இயைபுள்ளதாகாமை யுணர்க.

ஜகத்சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமன், முதல்முதல் அநிருத்த மூர்த்தியிடத்தே தோன்றினு னென்பது மஹா பாரதம் சாந்தி பர்வம்—"அநிருத்தாத் ததாப்ரஹ்மா தந்நாபி கமலோத்பவ:" (அநிருத்தாத் ததா ப்ரஹ்மா தந்நாபி கமலோத்பவ:) எனவரும் வாக்யத்தால் அறியப் படுதலான் ஸ்ருஷ்டியினாரம்பமும் இத் தொன்மிகு பெரு மரமாகிய அம்மூர்த்தியின்கண்ணே நிலையுறுவ தாதலால் இயைபு காணலாகும்.

"தேவுமெப் பொருளும் படைக்கப்
பூவினன்முகனைப் படைத்த தேவன்"(திருவாய், 2,2,4)

என்பதனுல் இப்படைப்பின் மூலம் ஸர்வேச்வரனிடத்திலே நிலைபெறுவது என்க.

**13.** அவன் மகள் முலையிலி = அப்பிரமனுக்கு மகளாய்த் தோன்றிய ஸரஸ்வதி ஸ்தனமில்லையாயினள் எ—று.

பிரமன் தவத்தால் அவன் திருமேனியிற் றோன்றினள் என்றும், இவள் அவனுக்கு மகளேயாகவும் இவளொழிலான் மனங்கவரப்பட்டுக் காமித்தானென்றும், அது கண்டு பிரமபுத்திரராகிய மகருஷிகள் பிரமனை வெறுத்தன ரென்றும் மத்ஸ்யபுராணமும் ஸ்ரீபாகவதமும் நன்குவிளக்குதலான், இவள் பிரமனுக்கு மகளேயாதல் தெள்ளிது. தமிழில் மகள் என்பது மனைவிக்கும் பெயராதலின், பின் அவன் இவளை மனைவியாக விழைந்ததற்கும் பொருந்தவே 'அவன் மகள்' என்று ஈண்டுக் கூறப்பட்டது என்பது பொருந்தும்.

இவளை முலையிலியென்றது, இயலும் இசையுமல்லது வேறு ஸ்தனமில்லாமையா லெனவுய்த்துணரலாகும். 'ஸங்கீதமபி ஸாஹித்யம் ஸரஸ்வத்யா: குசத்வயம்" (ஸங்கீதமபி ஸாஹித்யம் ஸரஸ்வத்யா: குசத்வயம்) என வரும் வடமொழிவழக்கா னுணர்க. ஸரஸ்வதி ஞானசக்தி என்பது

நூல்களின் றணிபு. 'ஞானமுதல்வி' என்பர். ஞானங் காமத்தைத் தொலைக்குமே யல்லது அதனை யுண்டாக்கமாட்டாது. "கற்றவர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ" என்று கம்பநாடர் பாடுதலானும் இஃதுணரலாகும். இங்ஙனங் காமஞ் செய்யாது ஞானமே செய்தலான் இவளை முதிர்ந்த மூதாட்டியாகவே வருணிப்பர். முலையின்மை காமமின்மைக்கு அடையாளமெனினும் பொருந்தும். "முலையிரண்டு மில்லாதாள் பெண்காமுற் றற்று" (திருக்குறள், 402) என்பதனன் இதனை யுய்த்துணர்க. முலையென்றது 'காமாநுபோகத்தை' என்று தக்கயாகப்பரணி உரைகாரர் வெளியிடுவதுங் காண்க. இவளையே பெரியபிராட்டியார் அமிசமான ஆத்மவித்யாரூபிணியாகக் கொண்டு உபாஸிக்குமிடத்து வ்ருத்தையாக வழங்குவது "ஸாயம் ஸரஸ்வதீம் ச்யாமாம்; நமாமி விஷ்ணுதைவத்யாம் வ்ருத்தாம் கருடவாஹநாம்" (ஸாயංஸரஸ்வதீංஶ்யாமாං; நமாமிவிஷ்ணுதைவத்யாංவ்ருத்தாංகருடவாஹநாං) என வருந் தியானத்தால் உலகம் அறிந்தது.

'நூல்வலையிற் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்' (நான்முகன்திரு. 40) என்பனூற் பெரியபிராட்டி வித்யாரூபிணியாதல் தெளியலாம். வாராமுலைமாதர் பேதையர் என்றும், வருமுலை மாதர் யுவதிகள் என்றும், வந்தமுலைமாதர் பேரிளம்பெண்டிர் என்றும், வந்து முலையில்லையாயினர் வ்ருத்தைகள் என்றும் தெரிந்துகொள்க. ஈட்டினரும் பதத்திற் சீயர் "யௌவன சூசகமான முலையானவை" என உரைத்ததனானும் இதனுண்மை யறியலாம். (திருவாய்மொழி 4-6-10) பெரிய பிராட்டியார் ஆத்மவித்யாரூபிணியாதல் விஷ்ணுபுராண ஸ்ரீஸ்துதியிற் கண்டது.

இவ்வாறு தலைவனுந் தலைவியும் முறையே தலையிலியும் முலையிலியுமாதலே யன்றி இத்தலைவி—

**14.** தானும் ஈனுள் ஈனவும் படாஅள் என்றது இவள் தானும் ஒரு ப்ரஜையைத் தன்னினின்று ப்ரஸவிக்கமாட்டாள், ஒருவராற் ப்ரஸவிக்கப்படவுமாட்டாள் எ-று.

ஈனுள்...படாஅள் என ஈண்டுக்கூறியதன் காரணம் நுணுகி நோக்கிற் புலனும். எவ்விதத்தினும் எவராலும் தவறாதவள் என்றுணர்க. (மஹாபாரதம், சாந்தி 353). இவள் வாக்தேவியாய்ச் சப்தமே வடிவாயுள்ளவளாதலின் உலகிற் பெண்டிர்போலக் கருவுயிர்த்தலில்லை. எ-று. இவள் வடிவமான சப்தம் பரப்ருஹ்மத்துக்கு ச்வாஸமாய் நித்யமான வேதவாக்யமாதலான், ஈனவும் படாஅள் என்றாரென்க. ஈனப்பட்டால் நித்யமாதல் கெடும்; "ஏதத் நிச்வஸிதம்" என்பது ப்ருஹதாரண்யக சுருதி. இவ்வாறே ஸுபாலசுருதியுங் கூறிற்று. இங்ஙனம் உள்ளவளாகியும்—

**15.** எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள்—எழுவரும் மூவருமாகிய பதின்மர்ப்ரஜைகளைப் பெற்றனள் என்றுவியப்புச் சுவைபட உரைத்தார். தசப்பிரமாக்களைப் புத்திரராக அடைந்தாள் என்பதைக் குறித்ததாம். காமாநுபவபோக ஸௌசகமான மூலையில்லாளாகியும், காமாநுபோகந் துய்த்தற்குரிய ஐம்பொறியுமுள்ள உத்தம அவயவவிசேட மில்லாதவனைக் கலந்து—வேதம் ஒவ்வொரு சுமங்கலையும் அடையவேண்டி ஆசிர்வதித்த—பத்துமக்களையும் பயந்தனள்: இது வியப்பாகும் என்பதாம். வேதம் பத்து மக்கள் பெறும்படி வாழ்த்தியது "தசாஸ்யாம் புத்ரா நாதேஹி பதிம் ஏகாதசம் க்ருதி" (ஒமாவஸாஂவாஃ தூ நாயெஹிவ திஶெகாஒமா கூரயி) என்னும் வாக்யத்தாலறிந்தது; "பதின்மர்மக்களைப் பெற்றுப் பதியைப் பதினோரா மகவாகச் செய்க" என்பது இதன் பொருள்.

இவள், பிரமாவின் சக்தியாய் அவன் உள்ளத்தமர்ந்து அவன் மானஸபுத்ரர்களான பிரமர்பதின்மரை உண்

டாக்கியபடியால் இங்ஙனங் கூறினர். பிரமதேவனுடைய புத்ரர்கள் பதின்மர் என்பதும், அவர் இவரிவர் என்பதும் ஸ்ரீமத் பாகவதம் 3–ஆம் ஸ்கந்தம் (12–22) "மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலஹர், க்ரது, ப்ருகு, வஸிஷ்டர், தக்ஷர், பத்தாமவராகிய நாரதர்" என்பதனால் அறிக. இவருள் ப்ருகு, மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது என்னும் இவர் ஸப்தப்ரஹ்மாக்கள் என்று ஸ்ரீ பாகவதத்தில் (11—14—4) ஒரு தொகையாக வழங்கப்படுதலான் எழுவர் மூவர் எனப் பிரித்துரைத்தார். பத்தினை மூன்றும்எழுமாக எண்ணிக் கோடலும் பண்டை வழக்கேயாகும். "முடிப்போது மூன்றேழென் றெண்ணினான்" (மூன்றாந் திருவந். 77) என்று பெரியார் பணித்தலா னறிக.

பிரமசக்தியாய்ப் பிரமனினைவி லமர்ந்து இப்பதின்மரையுந் தோற்றுவித்தலாற் பயந்தனள் என்றார். "விதியின் சிறுவர்" என்புழிப்போலச் சிறுவர் என்பது மக்களுக்காயிற்று.

உலகத்தை அபிவிர்த்தி செய்யவும், உயிர்கட்கு ஞானோதயஞ் செய்யவும், ஆசாரத்தை அநுஷ்டிப்பித்துத் திருத்தவும் இவரைப் பயந்தனள் என்று கருதிக் கூறினர். "மலர்மிசை முதல்வனு மற்றவ னிடைத்தோன்றி, யுலகிருளகற்றிய பதின்மரும்" எனப் பரிபாடலின் வருவது கொண்டு இதன் உண்மையுணர்க. 'சிந்தாதேவி' (சிலப்பதிகாரம்) என்பதும் புலமாமகள் என்பதும் (சிந்தாமணி) இவள் பெயராதலால், பிரமன் நினைவிலமர்தல் அறிக. இப்பதின்மரும் பிரமன் நினைவிற்றோன்றியோர் என்பது "விதியின் மக்களும்" (பரிபாடல். ௩) என்புழி 'ஆதிப்பிரமற்கு நினைவிற்றோன்றிய பிரமர் பதின்மருள்' எனப் பரிமேலழகர் உரைத்ததனான் உணரலாம்.

இனி இரட்டுறமொழிதலான், ஸரஸ்வதியாகிய வித்யாலக்ஷ்மி எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள் என்று

கொண்டு, மூன்றும் ஏழுமாய் அக்ஷரவொலிவடிவா நண்ணியவாய திருமந்திரம்பத்தெழுத்துக்களையும் உலகுய்ய உதவினள் எனினும் நன்குபொருந்தும்.

அகார உகார மகாரமாகப் பிரிபடும்பதுபற்றி ப்ரணவத்தை "த்ர்யக்ஷரீ" 'த்ரிவ்ருத்' என வழங்குதலான் அஃது மூன்றாதல் தெள்ளிது. எஞ்சிய 'நமோ நாராயணாய' என்பது ஏழாதல் கண்டுகொள்க. அக்ஷரங்கள் தேவதைகளின் வடிவாதலும் உயர்த்தியும் நோக்கி உயர்திணையாற் கூறினார். "இசைத்தலுமுரிய வேறிடத்தான" (தொல்காப்பியம்) என்பது, இலக்கணம்.

இங்ஙனம் மறைத்துக் கூறியது, மறையிற் றலைசிறத்தல் பற்றியும் இதன் கௌரவம்பற்றியும் தூய்மைபற்றியும் தெய்வத்தன்மை பற்றியும் எனக் குறிக்கொள்க. இதன் அநுக்ரக விசேடம் ப்ரஹ்லாதாழ்வான் முதலியோரிடம் நன்கு காணலாம். அக்ஷரங்கள் தெய்வவடிவே என்பதும் அவ்வவ் வக்ஷரங்கட்கு அதிதெய்வம் இவையென்பதும் அக்நிபுராணங் கூறிற்று. தமிழிலும் பாட்டியலிற் காணலாம். மந்த்ரகாரிணி ஸரஸ்வதி என்பதுபற்றி இவ்வாறு கூறப்பட்டது.

**16.** அவள் இவள் உவள் என அறிதல்—இவ்வாறு இருடிகளையும் திருமந்த்ரத்தையும் உலகுய்யப் பயந்த அத்தகையள் ஸரஸ்வதியென இலக்குமியென ஒருபடியாகத் துணிதல் எ-று. உவள்—உகாரார்த்தமா யுள்ளவள்: இலக்குமி என்பது திருமந்த்ரார்த்தத்தால் ஸம்ப்ரதாயஸ்தர் பலரும் நன்கறிவர். அவள் ஒழிந்த இவள் ஸரஸ்வதி என்பது தெள்ளிது. இது பிரமன் மகளாதலானும் நன்கறிந்ததாம். உபகாரஸ்ம்ருதி செய்யவேண்டுதலின் அறிதல் இன்றியமையாதென்று கருதிக் கூறினார். பத்தெழுத்தினையும் உலகில் வெளியிட்ட இருடியர் இப்பதின்மர் எனக்

கருதினரோ என ஊகிக்கவும் இடமுண்டு. இருடி, மந்த்ரம், தெய்வம் மூன்றும் ஸர்வதா உபாதேயமாகக் கடவன வென்பது நம் பெரியோர் திருவாக்காதலான், அவற்றையே இவரும் ஞாபிக்கின்றார் எனக் கொள்ளலுமாம்.

**17.** துவளறு காட்சிப் புலவரது கடனே- துவட்சியற்ற அறிவினற் புலவரென்று பெயர்சிறந்தாரது கடப்பாடே யாம் எ-று.

புலவரது கடன் என்றது, மஹாபாரதத்தில் "வித்வத் ஸம்ரக்ஷணம்" என ஓர் பகுதியுண்டு—அதன்கண், வித்வான் அஷ்டாக்ஷர ஜபபாராயணனாக இருத்தல் கூறப்பட்டுள்ளது. அவ்வுண்மையை அச்சங்கப்புவர்க்கு அறிவுறுத்துவாராய்க் கடன் என்றுரைத்தருளினரென்க. துவளல்-வாடுதல். துவளறு காட்சி - யதாவஸ்திதஞானம். அஃதாவது பொருளியல்புள்ளவாறுணரும் நுண்ணறிவு. புலவர் என்புழிப் புலம் அறிவாதலிற் காட்சிப் புலவர் என்பதற்கு இவ்வாறு கூறப்பட்டது. அன்றியும் இச்சங்கப்புலவர் ஸரஸ்வதி அம்சமென்ப வாதலான் அவள் பயந்த இருடியரையும், இலக்குமியின் வடிவாகிய அவளே பயந்த திருமந்த்ரத்தையும், அது கூறும் வாசுதேவ தருவையுமல்லது தஞ்சம் வேறில்லையென்றும் உய்த்துணர வைத்தவாறும்.

"பரமாத்ம சக்தி பலபல படியாகக் கேட்கப்படுவது" என்பது வேதமாதலின், அவள் இலக்குமியாகவும் ஸரஸ்வதியாகவும் நூல்கள் கூறுமென்றுணர்க. நாமங்கையே, நாவினுணின்று மலரு ஞானக் கலைகளுக்கெல்லாம் ஆவியும் ஆக்கையும் இறைவன்றனே (திருவாய் 1, 9, 8) என்று ஞாபித்து, அவ்விறைவனையும் அவள் பரிகரத்தையும் பாடுக என்று அருள்செய்தாள் எனக் கருதி உபகாரஸ்ம்ருதி பண்ணிய பெரியாரும் நம் ஆழ்வார்களி லுண்டு.

"நாம்பெற்ற நன்மையு நாமங்கை நந்நெஞ்சத்
தோம்பி யிருந்தெம்மை யோதுவித்து—வேம்பின்

பொருள்சீர்மை யாயினும் பொன்னுழி பாடென்
றருணீர்மை தந்த வருள்'' (58)

எனப் பூதத்தார் அருளிச்செயலா னறிக. ஸரஸ்வதியே வேத மந்த்ரகாரிணியென்று தக்கயாகப்பரணி உரையாசிரியர் உரைப்பர் (தாழிசை,593). இவற்றாற் பயந்தவள் இவள் என அறிதல் கடனென்றார்.

இனி நாமங்கையும் அறிந்தோதற்கரிய பொலிவுடையன் இறைவனென்று பாடியருளிய பெரியாரு முண்டு. இதனை "நாமங்கை தானு நலம்புகழ வல்லளே, பூமங்கை கேள்வன் பொலிவு" (மூன்றாந் திருவந்தாதி, 57) என்பதனால் அறியலாம். தான் நன்கறியாததொன்றை உலகிற்கோதவல்லவள் இவளில்லை யன்றே? ஆதலால் வித்யாலக்ஷ்மியாகிய பூமங்கை தான் தன்கேள்வன்படி உணரவல்லள்: உவள்தான் நம்வினை தீர்த்து அவனை உணர்த்தவல்லள்*; ஆதலான் 'உவளென அறிதல் கடன்' என்றார். இவ்விருவரும் பரமாத்ம சக்தி பேதமாதலின் எங்ஙனம் அறியினும் பயனுண்டென்பது கருத்து.

இனி எழுவர் மூவர் சிறுவரைப் பயந்தனள் எவள் அவள் பிரமற்கு மகளென மனையாட்டியென அறிதல் புலவர் கடன் என்றாரென்றலும் ஒன்று.

பராசத்தியியல்பு பலபடியாதல் பிறர்க்கு மொக்கும். இதனை "அவளத்தனா மகனாந் தில்லையான்" எனத் திருக்கோவையினும் "அனகநாடற் கெம்மன்னை, மனைவி தாய் தங்கை மகள்" எனச் சிதம்பரச் செய்யுட்கோவையினுங் கூறுதலானுணர்க. ஸரஸ்வதி பரமாத்மசக்தி யென்பதும் அவள் பிரமனுக்குப் புத்திரியாயினாள் என்பதும் தொன்னூற் றுணிபு. இவ்வாறே மஹாபாரதம் சாந்திபர்வம் மோக்ஷதர்மத்தில் "பிரமாவின் புத்திரியாகிய என்னுடைய ஸரஸ்வதீதேவியா

*"இலக்குமியே வித்யாரூபிணி" என்பது விஷ்ணு புராணம்.

னவள் தவறாதவள், சத்தியமுள்ளவள்" எனப் பகவான் அருளிச்செய்தலாவும் உண்மையறிக. இனி,

"கண்ணன் கழலிணை, நண்ணு மனமுடையீர்
எண்ணுந் திருநாமந், திண்ண நாரணமே" (10,5, 1)

என்னுந் திருவாய்மொழி எழுதிய திரு ஏட்டினைச் சங்கப் பலகையின்மேல் வைக்க அப்பலகை அத்திருவேட்டளவிற் சுருங்கிப் பிறர் இதனொடொக்கவிருக்க இடந்தாராது இதன் தெய்வச்சிறப்புணர்த்தியது என்று குருபரம்பரையிற் கேட்கப்படுதலான், அதற்கியைய அப்புலவர் ஆராய்ந்து துணிய எழுதியருளிய இத்திருப்பாட்டும் அத்திருநாம மந்த்ரத்தையும் அதைப் பயந்த பராசக்தியையும் அதற்குரிய பரதெய்வத்தையுந் தலைமையாகக்கொண்டதென்று உய்த்துணர்ந்து கொள்க.

பரமகாருணிகரான நம்மாழ்வார் தாம் பெற்ற பேறு எல்லாப் புலவர்க்குமாமாறு, ஸகல சாஸ்த்ரார்த்தங்களும் ஆடிநிழலின் அடங்கவைத்து மெய்ப்பொருள் தேற்றிய வித்தகத் தனிப்பாட்டு இஃதாகும். இங்ஙனம் வடநூற்பொருளையே யுடைய தமிழ்ப் பாட்டாதலின் இதனை "ஆரியத் தமிழ்" என்று கூடலழகர்புராணமுடையார் கூறினரென்க. வேதப்பொருளேயுடைய தமிழை 'வேதத் தமிழ்' என்பதுபோல இதனையுங் கொள்க.

"ஈயா டுவதோ கருடற் கெதிரே
இரவிக் கெதிர்மின் மினியா டுவதோ
நாயா டுவதோ வுறுமிப் புலிமுன்
நரிகே சரிமுன் னடையா டுவதோ
பேயா டுவதோ வெழிலூர் வசிமுன்
பெருமா னடிசேர் வகுளா பரணன்
ஓரா யிரமா மறையின் றமிழின்
ஒருசொற் பொருமோ வுலகிற் கவியே"

என்பது சங்கத்தார் இவ்வரிய பாசுரத்தை வியந்து ஆழ்வார்திவ்யபிரபந்தத்தைப் புகழ்ந்துபாடிய பாட்டாகும்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

---

THE R. S. PRESS, MOUNT ROAD, MADRAS.